| 24.10.2024 | 43. ‘சுவிசேஷ நற்பணி’ ஏற்பது, நமது அன்பின் கடமை! |
| --- | --- |



**ந**ம்மைத் தேடி வந்த இயேசு ஆண்டவர் வழங்கிய அன்பின் இரட்சிப்பை பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும், நன்றியுள்ளத்தோடு பிறரைத் தேடி சுவிசேஷப் பணியை நிறைவேற்ற வேண்டியது ‘ஓர் ராஜ கட்டளை’யாகும்! விலையேறப்பெற்ற அவரது ராஜ கட்டளையை ‘எந்த ஒரு மானிடனும்’ மட்டுப்படுத்தவோ அல்லது அவரது கட்டளையை பிரித்து கையாளுவதோ, மிகப்பெரிய தவறு! பிறருக்கு நம் இரட்சகரின் சுவிசேஷத்தை வழங்குவது “உங்கள் உள்ளத்திலிருந்து ஜீவ நதி புரண்டோடும்” என்ற ஆண்டவரின் வாக்குதத்தம் உங்களில் நிறைவேறுவதைக் காண்பீர்கள்!

முன்னோடியான பக்தர்களில் அநேகர், சுவிசேஷக் கூட்டங்கள் மூலமாக இரட்சிக்கப் பட்டதாகவே சரித்திரம் கூறுகிறது! அந்த புள்ளி விபரத்தில், சுவிசேஷ கூட்டங்களின் மூலமாகவே, இன்றுள்ள விசுவாசிகளில் 100-க்கு 62 பேர் கிறிஸ்துவினிடம் ஈர்க்கப்பட்டிருக்கி றார்கள். ஆகவே, இன்றைய இரட்சிக்கப்பட்ட வாலிபர்கள், எவ்விதத்திலும் சோம்பி நின்று விடாதபடி, சுவிசேஷ பிரபல்யத்திற்கென பேரார்வம் கொண்டு, நமக்கு முன் உழைத்த உத்தம ஊழியர்களின் ஸ்தானத்திற்கு வந்து, சுவிசேஷ ஊழியத்தை தங்கள் மேல் விழுந்த ‘அன்பின் கடமையாய்’ ஏற்று, நிறைவேற்றுவது அவசியம், மிகவும் அவசியம்!!

– ரத்னம்